Wild life sanctuary

*96 Q.—THIRU E. M. NATARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any scheme under consideration to establish a wild life sanctuary in the forests in Burgur hill areas of Bhavani taluk in Coimbatore district?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை.

தஞ்சை மாவட்ட அரிசன நலப்பள்ளி ஆசிரியர்கள்

*97 **வினா.—திரு. கே. இரா. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலுள்ள அரிசன நலப்பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை எவ்விதக் காரணமுமின்றி மாவட்டம் பூராவும் அடிக்கடி மாற்றம் செய்வதை தடுத்து நிறுத்த உடனடி நிர்வாக உத்தரவு அரசாங்கம் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை. நிர்வாக வசதிக்காகவும், தகுந்த காரணங்களை முன்னிட்டும் இக்கல்வியாண்டில் ஒரு சிலர் மாற்றப்பட்டனர் என்று தஞ்சாவூர் கலெக்டர் அறிவித்துள்ளார்.

திரு. கே. இரா. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களை மாற்றுவதற்கு அட்ஹாக் கமிட்டி போன்று ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோல இந்த ஆசிரியர்களை மாற்றுவதற்கும் அம்மாதிரி ஒரு கமிட்டி ஏற்படுத்துவதற்கு இந்த அரசு உத்தரவிட்டால், இம்மாதிரி தவறுகள் நடக்காமல் தடுப்பதற்கு அனுசரணையாக இருக்காதா? அதைப் பற்றி அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தவறுதல் காரணங்களுக்காக ஆசிரியர்களை மாற்றவில்லை. ஆனால், 16 பேர்கள் கணவன் மனைவியாக பல்வேறு இடங்களில் இருந்த காரணத்தினால், 1966-ம் ஆண்டில் திருக்காட்டுப்பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர்கள் மாநாட்டில், 16 பேர்கள் கணவன் மனைவியாக இருப்பவர்களை ஒரே இடத்திற்கு மாற்றவேண்டும் என்று விண்ணப்பம் செய்து கொண்டிருந்தார்கள். அதற்கேற்றவாறு 16 பேர்களும் கணவன் மனைவி ஒரே இடத்தில் இருக்கும்படியாக மாற்றப்பட்டார்கள். மேலும் சில இடங்களில் சில புகார்களுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 31 ஆசிரியர்கள் அவர்களாகவே விரும்பி பல்வேறு இடங்களுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிறகு, மாற்றப்பட்டார்களே தவிர, வேறு எந்தவித தவறுதல் காரணத்திற்காக யாரையும் மாற்றவில்லை. அதற்காக தனியாக எந்தவித அமைப்பும் ஏற்படுத்தவேண்டிய அவசியமில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பொதுவாகவே, இந்த மாவட்டத்தில் இத்தகைய டிரான்ஸ்பர்ஸ் ஏராளமாக நடந்து கொண்டிருக்கின்றன என்று என்னிடத்திலே விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கு கலெக்டர் தகவல்